Interfaith Declaration on Climate Change

**தட்ப வெப்ப நிலை மாற்றம் குறித்த அறிவிக்கை**

இயற்கையின் தன்மைகள் குறித்துக் கவலை கொள்வதும் மதிப்பதும் அனைத்து நம்பிக்கைகள், சமயங்களின் உட்கருத்தாகும். யின், நாம் உருவாக்கும் பசுமை இல்ல (greenhouse) வாயுக்களால் இன்று மனித குலத்தின் வாழ்க்கையே கேள்விக்குறியாகி உள்ளது. இந்த வாயுக்கள் புவியின் தட்பவெப்ப நிலையைக் கேடுறச் செய்கின்றன; புவியைச் சூடாக்குகின்றன; கடல்களை அமிலத் தன்மை உடையதாக மாற்றுகின்றன; மாந்தகுலத்தை மட்டுமல்லாமல் அனைத்து உயிர் வாழ் இனங்களையும் ஆபத்துக்குள்ளாக்குகின்றன.

இயற்கையின் மென்மையான சமன் நிலை ஒவ்வொரு நாளும் தெளிவாகி வருகின்றது. அதே நேரத்தில், ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த, புவி, வளிமண்டலம், கடற்பகுதி, வாழ்க்கை ஆகியவற்றை மனிதனுடைய தவறான நடவடிக்கைகள் மீளவியலாத மாற்றங்களுக்கு உட்படுத்திப் பேராபத்தை விளைவிக்கின்றன.

நாம் வாழும் புவியைக் காப்பாற்றவும், துன்புறுவோரைக் காப்பாற்றவும் நாம் இன்று ஒன்றுபட்டுள்ளோம். பருவ நிலை மாற்றங்கள் குறித்து அறிவார்ந்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவல்ல உணர்வும் பரிவு மிகுந்த தலைமையை நம் நம்பிக்கைகளின் உட்கருத்துகள் வரவேற்கின்றன.

நாம் பருவநிலை மற்றங்களின் அறிவியல் அடிப்படைகளை ஏற்று, உறுதியான கட்டுப்பாடுகளுடன் கூடிய அறிவியல் அடிப்படையிலான கொள்கைகளைப் பின்பற்றி, பசுமை இல்ல வளிகளின் தன்மைகளைக் குறைத்துப் பருவ மாற்றங்களினால் ஏற்படும் தீய விளைவுகளைக் களைந்திட முன்வருமாறு நம் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். வெப்ப தட்ப மாற்றங்களின் விளைவுகளான கடும்புயல்கள், வெள்ளப் பெருக்கு, வறட்சி, கொந்தளிக்கும் கடல்கள் ஆகியவற்றால் தொல்லையுறும் மக்களுக்கு உதவிட உறுதி

அளித்திட வேண்டுமென்று அனைத்து நாடுகளையும் வற்புறுத்துகிறோம். அந்த மக்கள் மாறும் சூழ்நிலைகளுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளவும், தப்பிப்பிழைத்திடவும், நல்வாழ்வு பெறவும் உதவி அளிக்கப்பட வேண்டும்.

பருவநிலை மாற்றம் என்பது பொருளாதார அல்லது தொழில்நுட்பம் சார்ந்தது அல்ல என்பதை நாம் ஏற்கிறோம். அடிப்படையில் அது அறம், ஆன்மிகம் பண்பாடு சார்ந்தது. எனவே, நாம் ஒன்றிணைந்து பருவநிலை மாற்றம் குறித்து மக்களுக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மாற்று ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்க நல்வழி காட்டிட உறுதி மேற்கொள்கின்றோம். நாம் இந்தப் புவியுலகின் இயற்கை நெறிகளுக்குட்பட்டு ஒன்றிணைந்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

வெப்ப தட்ப நிலை மாற்றத்தினால் நாம் மிகப் பெரும் அறைகூவல்களையும் அரிய வாய்ப்புகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம் என்பதை அறிவோம். பருவநிலை மாற்றத்தின் ஆபத்தான விளைவுகளைக் குறைப்பதால், நம்முடைய பொருளாதாரம் வளர்ச்சி அடைவதுடன் நம் புவியைக் காப்பாற்றிடவும் ஏழைகளுக்கு உதவிடவும் பொதுநன்மைக்காக நாம் ஒன்றிணையவும் வாய்ப்புகள் உருவாகின்றன. நாம் அறிவையும் உணர்வுகளையும் உயர்ந்த அறவழிகளையும் கைக்கொண்டு மற்ற மக்களும் உயிரினங்களும் பருவநிலை மாற்றங்களுக்கேற்பத் தங்களை மாற்றிக்கொண்டு பிழைத்து வாழ வழி செய்திடவும் உதவிடுவோம்.

நம்முடைய பழக்க வழக்கங்களையும், விருப்பங்களையும் உலகம் குறித்த நம் பார்வையையும் மாற்றிக் கொள்ளவும், இப் புவியுலகத்தின் இயற்கைத் தன்மைகளையும், நம் வீட்டளவில் நமக்குள்ள மூல வாய்ப்புகளையும், நம் வாழ்நிலை சார்ந்துள்ள பருவநிலைகளின் தன்மைகளையும் குறித்து நம் குடும்பத்தினர், நண்பர்கள் அனைவரும் கற்பிக்கவும் கற்கவும் உறுதி மேற்கொள்ளுகின்றோம்.

Interfaith Declaration on Climate Change

இந்த உணர்வோடு, நம் தலைவர்கள், சமய நம்பிக்கையாளர்கள், உலகின் கண் வாழும் மக்கள் அனைவரும் வானிலை மாற்றத்தால் ஏற்படும் கேடான விளைவுகள் குறித்த உண்மைகளை ஏற்றுணர்ந்து அவற்றை மாற்றுவதற்காக நாம் உடனடியாக ஆற்ற வேண்டிய முடுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.